SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

நவம்பர் - 2018

# TNPSC ZERO CURRENT AFFAIRS MAINS

**0%** Effort | **100%** Results


www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in


Available @Bookmark Store.


Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# NOVEMBER 2018 IMPORTANT TOPICS

## TAMILNADU/தமிழ்நாடு

1. TN Lok Ayukta Act
   தமிழ்நாடு மாநில லோக் ஆயுக்தா சட்டம்

2. Gaja Cyclone
   கஜா புயல்

## NATIONAL/தேசம்

1. RBI Core Banking Solution (E-Kuber) System
   இந்திய ரிசர்வ்வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவைமுறை

2. Statue of Unity
   ஒருமைப்பாட்டுக்கான சிலை

3. Metoo
   நானும் தான்

4. GST Council
   ஜி.எஸ்.டி. கவுன்சில்

5. PAISA Portal (Portal for Affordable Credit and Interest Subvention Access)
   மலிவான கடனுதவி மற்றும் குறைந்த வட்டியுடனான பண உதவி பெறுவதற்கான இணைவாயில்

6. Umang app
   உமாங் செயலி

7. Cosmic Farming
   காஸ்மிக் பார்மிங்

8. Solid Waste Management Rules, 2016
   திடக் கழிவு மேலாண்மை விதிகள் 2016

9. Himalayan State Regional Council
   இமயமலை மாநிலங்களின் பிராந்திய குழு

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## SCHEMES/YOJANAS

1. Pradhan Mantri Jan Arogya Yojana (Ayushmaan Bharat)
பிரதமரின் மக்கள் நலத்திட்டம்-ஆயுஷ்மான் பாரத்

2. eNAM
மின்-தேசிய வேளாண் சந்தை

3. Saubhagya scheme
சௌபாக்யா திட்டம்

4. Paramparagat Krishi Vikas Yojana
பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத் திட்டம்

5. GOBAR-Dhan
கோபார் தன்

6. Mission Raksha Gyan Shakti
ராக்ஷா கியான் சக்தி இயக்கம்

7. Yuva Sahakar
யுவ சஹாகார்

8. Operation Green (TOP)
பசுமை நடவடிக்கை

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## SUMMITS & CONFERENCES

1. Vayoshreshtha Samman – 2018
வயோஷ்ரேஷ்த சம்மன் - 2018

## MILITARY EXERCISE

1. Dharma Guardian 2018
தர்மா கார்டியன் 2018

## SCIENCE AND TECHNOLOGY

1. Eco Sensitive Zone
சூழல் கூருணர்வு மண்டலம்

2. DNA Hybridization
டி. என். ஏ கலப்பினச் சேர்க்கை

3. GSLV MKIII D2
ஜிஎஸ்எல்வி எம்கேIII D2

4. Shakti – India's first Indigenous Microprocessor
சக்தி - இந்தியாவின் முதலாவது நுண்சில்லு

5. Green Crackers
பசுமை பட்டாசுகள்

6. SAFAR - System of Air Quality and Weather Forecasting and Research
காற்றின்தரம்மற்றும்வானிலைமுன்னறிவிப்புமற்றும்ஆராய்ச்சி அமைப்பு

7. Insight mission
இன்சைட் திட்டம்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## DEFENCE & SPACE

1. HYSIS Satellite
ஹைசிஸ் செயற்கைக்கோள்

## PERSON IN NEWS

1. IravadhamMahadhevan
ஐராவதம் மகாதேவன்

2. Mars man - Mayilsamy Annadurai
செவ்வாய் மனிதர் - மயில்சாமி அண்ணாதுரை

## SPORTS

1. Marykom Achievements
மேரிகோமின் சாதனைகள்

## MISCELLANEOUS

1. Sentenelese island
சென்டினல் தீவுகள்

2. Kartarpur Corridor
கர்தார்பூர் வழித்தடம்

3. G20
ஜி20

4. SAGAR - Security and Growth for all in the Region
பிராந்தியத்திலுள்ள அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி

5. Naturopathy Day
இயற்கை மருத்துவ தினம்

6. Regional Integrated Multi-Hazard Early Warning System for Africa and Asia (RIMES)
பல்வகைப்பட்ட பேரிடர்களையும் முன் கூட்டியே அறிவிக்கும் ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவின் ஒருங்கிணைந்த பிராந்திய மையம்

7. #POWEROF18 Campaign
#POWEROF18 பிரச்சாரம்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

# நவம்பர் - 2018

## 3 மதிப்பெண் வினாக்கள்

**1. E-KUBER என்றால் என்ன?**

i) இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) ஒருங்கிணைந்த வங்கி சேவை முறை.

ii) நாடு முழுவதிலும் உள்ள வங்கிகள் அனைத்துக்கும் தனித்தனி நடப்புக் கணக்கினை வழங்குதல்.

iii) அரசின் முதலீட்டுப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கும் இந்த முறையானது பயன்படுகிறது.

**2. 'ஒருமைப்பாட்டு சிலை' பற்றி சிறு குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| (i) | **ஒருமைப்பாட்டு சிலை** | **உலகின் மிக உயரமான சிலை (182 மீட்டர்) - சர்தார் வல்லபாய் படேலுக்காக அமைக்கப்பட்டது.** |
| (ii) | இடம் | சாது பெட் தீவு, நர்மதை ஆறு, குஜராத் |
| (iii) | சிலையை வடிவமைத்தவர் | ராம் V.சுடர் |

**3. பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா திட்டத்தின் குறிக்கோள்கள் யாவை?**

i) உலகின் மிகப்பெரிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

ii) ஒரு ஆண்டுக்கு குடும்பம் ஒன்றுக்கு ஐந்து லட்ச ரூபாய் வரை இலவச மருத்துவக் காப்பீடு வழங்குகிறது.

iii) மத்திய ஆரோக்கிய மற்றும் குடும்பநல அமைச்சகம்.

**4. "பசுமைப்பட்டாசுகள்" என்றால் என்ன?**

பொட்டாசியம் நைட்ரேட்டை ($KNO_3$) அகற்றுவதன் மூலம் குறைந்த அளவே மாசுபடுத்தும் பட்டாசுகளை CSIR அமைப்பானது உருவாக்கியுள்ளது.

(எ.கா.) i) SWAS – Safe Water Releaser

ii) SAFAL – Sage Minimal Aluminium

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**5. SAFAR பற்றி சிறுகுறிப்பு வரைக.**

i) SAFAR – காற்றின் தர முன்னறிவுப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (System of Air Quality Forecasting and Research)

ii) புனேயிலுள்ள இந்திய வெப்ப மண்டலக் காலநிலை நிறுவனத்தால் (IITM, Pune) வடிவமைக்கப்பட்டது.

iii) வளிமண்டலத்திலுள்ள காற்றின் தரம் பற்றிய ஆராய்ச்சிக்கு உதவுகிறது.

**6. "METOO" என்றால் என்ன? அது செய்திகளில் இடம்பெற்றதன் காரணம் என்ன?**

i) METOO – பணியிடங்களில் நிகழும் பாலியல் சீண்டல்களுக்கு எதிரான உலகளாவிய ஒரு இயக்கமாகும்.

ii) மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகமானது 'METOO' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது.

**7. 'ஐராவதம் மகாதேவன்' அண்மையில் செய்திகளில் இடம் பெற்றதன் காரணம் என்ன?**

i) மொழியியலில் புலமை பெற்றவர் - வேத கால மற்றும் சிந்து சமவெளி எழுத்துருக்களில் திராவிட கூறுகள் பற்றி ஆராய்ந்தவர்.

ii) நூல் : "Early Tamil Epigraphy from the earliest times to the Sixth Century A.D."

**8. "சென்டினல் பழங்குடியினர்" பற்றி சிறு குறிப்பு வரைக.**

i) சென்டினல்கள் - உலகிலேயே மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட பழங்குடியினர்; வடக்கு அந்தமானின் சென்டினல் தீவுகளில் வசிக்கின்றனர்.

ii) இந்திய அரசாங்கமானது சென்டினல்களை 'மிகவும் அழியும் நிலையிலுள்ள பழங்குடியினராக' (PVTG) அறிவித்துள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

**9. CGDP என்றால் என்ன? இது தமிழ்நாட்டில் எங்கெங்கு நடைமுறைப்படுத்தப் படுகிறது?**

i) CGDP – நகர எரிவாயு விநியோகத் திட்டம் (City Gas Distribution Project) - வணிக மற்றும் வீட்டு பயன்பாட்டுக்காக குழாய்கள் மூலம் இரண்டாம் நிலை இயற்கை எரிவாயுவினை வழங்கும் திட்டம்

ii) தமிழ்நாடு - சேலம் & கோயம்புத்தூர்

**10. கர்தார்பூர் வழித்தடம் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

i) இந்திய சீக்கிய புனிதப் பயணிகள் பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள தர்பார் சாகிப் குருத்வாராவுக்குச் சென்று வருவதற்கான வழித்தடம்.

ii) விசா இல்லாத பயணம்

iii) ராவி நதிக்கரையின் ஓரமாகவே இவ்வழித்தடமானது செல்கிறது.

**11. சூழலியல் கூருணர்வு மண்டலம் என்றால் என்ன?**

i) சுற்றுச்சூழல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்கள் சிறிய அளவிலான பாதிப்புகளுக்கும் சிதிலமடையக் கூடியனவாக உள்ளன. எனவே இவற்றுக்கு கவனமான மேலாண்மை தேவைப்படுகிறது.

ii) இவை சூழலியல் நுண்ணுணர்வு மண்டலங்கள் (Ecologically Fragile Areas) என்றும் அழைக்கப்படுகின்றன.

iii) இவை தேசிய பூங்காக்கள், வன உயிர் சரணாலயங்கள் போன்ற பாதுகாக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிலும் சூழலியல் சீர்கேட்டைத் தடுக்கும் வகையில் அமைக்கப்படுகின்றன.

**12. 2018-ம் ஆண்டில் மேரி கோம் செய்த சாதனைகள் யாவை?**

| வ.எண் | விளையாட்டுப் போட்டிகள் - குத்துச்சண்டை | பதக்கங்கள் |
|---|---|---|
| (i) | காமன்வெல்த் போட்டிகள் - 2018 | தங்கம் (முதல் தங்கம்) |
| (ii) | உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகள் | தங்கம் (ஆறாவது முறை) |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**13. 'உமாங்க் செயலி' (UMANG App) பற்றி சிறு குறிப்பு வரைக.**

i) UMANG – United Mobile Application for New Age Government.

ii) ஆதார் அட்டை, வருங்கால வைப்பு நிதியம் போன்ற பல அரசு சேவைகளைப் பெறுவதற்கான ஒற்றை செயலி.

iii) மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புத் துறையால் உருவாக்கப்பட்ட செயலி.

**14. இன்சைட் திட்டம் பற்றி (Insight Mission) சுருக்கமாக எழுதுக.**

i) Insight – Interior Exploration using Seismic Investigations, Geodesy & Heat Transport – நாசாவின் திட்டம்

ii) செவ்வாய் கோளின் நிலவியல் வளர்ச்சிப் பரிணாமம் பற்றிய ஆய்வுக்கான திட்டம்.

iii) 2018 மே 5 அன்று விண்ணில் செலுத்தப்பட்டது.

**15. நீலப் பொருளாதாரம் - வரையறு.**

i) கடல்சார் வளங்களை பொருளாதார வளர்ச்சிக்காகவும் கடல் சூழலியல் மண்டலத்தினைப் பாதுகாக்கும் வகையிலும் நிலையான முறையில் பயன்படுத்துதல்.

**ii) உட்கூறுகள் :**

a) மீன்வளம்

b) கடல் சார் போக்குவரத்து

c) சுற்றுலா

d) கழிவு மேலாண்மை

**16. நிர்பயா நிதியம் என்றால் என்ன? இது ஏற்படுத்தப்பட்டதன் காரணம் என்ன?**

i) 2013-ம் ஆண்டு மத்திய நிதி அமைச்சகத்தினால் 1000 கோடி ரூபாய் நிதியுடன் தொடங்கப்பட்டது.

ii) பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும் நோக்கம் கொண்டது.

iii) Non-lapsable Corpus Fund

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

**17. 'செவ்வாய் மனிதர்' என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?**

i) மயில்சாமி அண்ணாதுரை

ii) மங்கள்யான் என்னும் 'செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின்' (Mars Orbiter Mission) திட்ட இயக்குநர்.

iii) பங்களிப்பு : சந்திரயான் – 1, சந்திரயான் – 2.

**18. சவுபாக்யா திட்டத்தின் நோக்கங்கள் யாவை?**

i) Saubhagya – Sahaj Bijli Har Ghar Yojana

ii) நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்குதல்.

iii) SECC 2011-ன் படி வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு (BPL) இலவச மின்சாரம்

iv) நடைமுறைப்படுத்தும் முகமை - ஊரக மின்வசதியாக்கக் கழக நிறுவனம் (RECL)

v) மத்திய ஆற்றல் அமைச்சகம்.

**19. GST குழுவின் அமைப்பு பற்றி எழுதுக.**

i) சரத்து 279A – GST குழு அமைப்பு

ii) தலைவர் - மத்திய நிதியமைச்சர்

iii) வருவாய் மற்றும் நிதிக்கான இணை அமைச்சர்

iv) அனைத்து மாநிலங்களின் நிதி அமைச்சர்கள்

**20. PKVY-ன் நோக்கங்கள் யாவை?**

i) பரம்பரகத் கிரிஷி விகாஸ் யோஜனா

ii) விவசாயிகளிடையே இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான திட்டம்.

iii) கொத்தான நிர்வகிப்பு முறை (Cluster Approach) மூலம் இயற்கை வேளாண்மைக்கு உதவுதல்.

iv) மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**21. 'அம்ருத் திட்டம்' (AMRUT) பற்றி சிறுகுறிப்பு வரைக.**

i) Atal Mission for Rejuvenation & Urban Transformation.

ii) தரநிலை - 2 மற்றும் தரநிலை - 3 நிலைகளிலுள்ள நகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டம்

iii) அம்ருத் திட்டமானது JNNURM திட்டத்துக்கு மாற்றாகத் தொடங்கப்பட்டது.

iv) 2015-ல் தொடங்கப்பட்டது.

**22. ஹவுஸ்லா (HAUSLA) – 2018 என்றால் என்ன?**

i) குழந்தைகள் நல நிறுவனத்தால் (CCI) நடத்தப்பட்ட குழந்தைகளுக்கான தேசிய அளவிலான திருவிழா.

ii) நாடு முழுவதிலும் CCI-ல் உள்ள குழந்தைகள் தங்களது திறமையினை வெளிப்படுத்துவதற்கான தேசிய அளவிலான தளம்.

iii) கருத்துரு : 'குழந்தைகள் பாதுகாப்பு'

iv) மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.

**23. 'இரட்டை இடர்ப்பாடு' மற்றும் 'தன் செயலால் தானே குற்றச்சாட்டிற்கு உட்படுதல்' என்பன பற்றி எழுதுக.**

| இரட்டை இடர்ப்பாடு | தன் செயலால் தானே குற்றச்சாட்டிற்கு உட்படுதல் |
|---|---|
| எந்த ஒரு நபரும் தான் செய்த தவறுக்காக ஒன்றுக்கும் மேற்பட்ட தண்டனைகளை அனுபவிக்க கூடாது என்று சரத்து 20 (2) - ல் குறிப்பிடப்பட்டுள்ளது. | குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு நபரும் தனக்கு எதிராக தானே சாட்சியாக இருக்கும்படி வற்புறுத்தப்படலாகாது என்று சரத்து 20 (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. |

**24. PAISA இணைவாயில் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

i) **PAISA** – **P**ortal for **A**ffordable Credit & **I**nterest **S**ubvention **A**ccess

ii) அலகாபாத் வங்கியால் வடிவமைக்கப்பட்டது.

iii) வங்கிக் கடன்களின் வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான மையநிலைப்படுத்தப்பட்ட மின்னணுவியல் தளம்.

iv) தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் (DAY-NULM) பயனாளர்களுக்கான திட்டம்.

**25. DNA கலப்பினச் சேர்க்கை தொழில்நுட்பம் - வரையறு.**

i) ,இரு வேறு டி.என்.ஏ. மூலக்கூறுகளை ஒன்றாக இணைத்து புதிய இரட்டைச் சுருள் டி.என்.ஏ. மூலக்கூறினை உருவாக்குதல்.

எ.கா. இனம் 1 + இனம் 2 = புதிய இனம்

**26. 'SpinNNaker Machine' பற்றி சிறுகுறிப்பு வரைக.**

i) Spiking Neural Network Architecture Machine – உலகின் மிகப்பெரிய மீத்திறன் கணினி.

ii) மனித மூளை போன்ற செயல்படக் கூடியது.

iii) இங்கிலாந்தின் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தினால் வடிவமைக்கப்பட்டது.

iv) வேகம் : வினாடிக்கு 200 மில்லியன் மில்லியன் செயல்பாடுகள், அதனுடைய சில்லுகளில் 100 மில்லியன் திரிதடையகங்கள் உள்ளன.

**27. ஆபரேஷன் பசுமை (Operation Green) என்றால் என்ன?**

i) விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கான சரியான வலையைப் பெறும் பொருட்டு உருவாக்கப்பட்ட விலை நிர்ணயத் திட்டம்.

ii) பயன் பெறுவோர் : விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்பு, வேளாண்-பண்டகவியல், தொழில்முறை மேலாண்மை.

iii) TOP: Tomato (தக்காளி), Onion (வெங்காயம்), Potato (உருளை)

**28. கோபார் - தன் திட்டத்தின் (GOBAR - DHAN) நோக்கங்கள் யாவை?**

i) Galvanizing Organic Bio-Agro Resource Fund Scheme

ii) கால்நடைகள் மற்றும் உயிரி கழிவுகளிலிருந்து எரியாற்றலை உருவாக்குதல்.

iii) கிராமப் புறங்களில் வாழ்வாதாரத்துக்கான வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் விவசாயிகள் மற்றும் பொது மக்களின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்.

**29. 'தர்மா - கார்டியன் 2018' (Dharma – Guardian 2018) பற்றி சிறுகுறிப்பு வரைக.**

i) இந்தியா - ஜப்பான் நாடுகளுக்கிடையிலான முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சி.

ii) உலகளாவிய தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடுதல்.

iii) மிசோரத்திலுள்ள கிளர்ச்சிக்கு எதிரான யுத்தமுறைப் பயிற்சிப் பள்ளியில் (Counter Insurgency Warfare School) நடைபெற்றது.

**30. யுவ சஹாகர் என்றால் என்ன?**

i) கூட்டுறவுத் தொழில் முயற்சிகளில் ஈடுபடும் வகையில் இளைஞர்களை ஊக்குவித்தல்.

ii) தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தால் (NCDC) தொடங்கப்பட்ட திட்டம்.

iii) 2022-ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்.

**31. 'ராக்ச கியான் சக்தி திட்டம்' பற்றி சிறு குறிப்பு வரைக.**

i) உள்நாட்டு இராணுவ உற்பத்தியில் அறிவுசார் சொத்துரிமை (IPR) கலாச்சாரத்தினை வளர்த்தெடுத்தல்.

ii) நடைமுறைப்படுத்தும் முகமை : தர மதிப்பீட்டுக்கான இயக்குநர் ஜெனரல் (DGQA)

**32. இமயமலை மாநிலங்களுக்கான மண்டலக் குழு மேற்கொண்டுள்ள பணிகள் யாவை?**

i) இமயமலை பகுதிகளில் நிலையான சுற்றுலா வளர்ச்சி.

ii) மாற்றுமுறைப் பயிரீடு - மாற்றத்தை நோக்கிய ஒரு அணுகுமுறை

iii) தண்ணீர்த் தேவைக்காக நீரூற்றுகளை மீட்டெடுத்தல்.

iv) செயல்திறன் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை மேம்படுத்துதல்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

**33. சக்தி நுண்சில்லு (Shakthi Microprocessor) பற்றி சுருக்கமாக எழுதுக.**

i) இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நுண்சில்லு.

ii) மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தால் (IIT Madras) வடிவமைக்கப்பட்டது.

iii) பயன்பாடுகள் : மோட்டார் கட்டுப்பாடு, ரோபோட்டிக்ஸ் துறை, வீட்டு உபயோகப் பொருட்கள்.

**34. வாரணாசியில் அமைக்கப்பட்டுள்ள உள்நாட்டு பன்முனையப் பெட்டகம் (Inland Multimodal Terminal) பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

i) கங்கை நதியில் தேசிய நீர்வழிச்சாலை - 1ல் (NW-1) அமைக்கப்பட்டுள்ளது.

ii) உலக வங்கி உதவியுடன் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையத்தின் (IWAI) ஜல் மார்க் விகாஸ் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டது.

**35. ACROSS திட்டம் என்றால் என்ன? அதனை நடைமுறைப்படுத்தும் முகமைகள் யாவை?**

i) Atmosphere Climate Research – Modelling Observing Systems & Services (ACROSS) புயல்கள், சூறாவளிகள், வெப்ப அலைகள், இடியுடன் கூடிய மழை ஆகியவற்றை முன்னறிவிப்பு செய்ய உதவுகிறது.

**ii) நடைமுறைப்படுத்தும் முகமைகள்** :

a. இந்திய வானிலை ஆய்வுத்துறை (IMD)

b. இந்திய வெப்பமண்டல வானிலையியல் நிறுவனம் (IITM)

c. தேசிய மத்திய தர வானிலை முன்னறிவிப்பு மையம் (NCMRWF).

d. தேசிய கடல்சார் தகவல் சேவை மையம் (INCOIS)

**36. ‘வயோஷ்ரேஷ்த சம்மன் - 2018’ விருதானது யாருக்கு எப்பொழுது வழங்கப்பட்டது?**

i) வயது முதிர்ந்தவர்களுக்கான சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக வழங்கப்படும் விருது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii) வயது முதிர்ந்தவர்களுக்கான சர்வதேச தினத்தன்று வழங்கப்படுகிறது. (2005 முதல் ஒவ்வொரு அக்டோபர் மாதமும் 1ம் நாள் அன்று வழங்கப்படுகிறது)

iii) மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்படும் விருது.

## *8 மதிப்பெண் வினாக்கள்*

**1. மின்-தேசிய வேளாண் சந்தை (e-NAM) பற்றி விவாதிக்க.**

மின்-தேசிய வேளாண் சந்தை (e-NAM) :

i) வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கான மின்னணு வியாபார இணையவாயில்

ii) 2016 ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது.

**நோக்கம்** :

i) நாட்டின் அனைத்து வேளாண் உற்பத்திப் பொருட்கள் சந்தையிடும் அமைப்புகளையும் (APMC) ஒன்றாக இணைத்து வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கான ஒருங்கிணைந்த தேசிய சந்தையை உருவாக்குதல்.

ii) 2022-ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்.

**திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அமைப்பு** :

i) சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டிணைவு (SFAC)

e-NAM திட்டத்தின் சிறப்பம்சங்கள் :

i) e-NAM என்பது இணைய வழி சந்தையாகும்; பின்புலத்தில் உண்மையான சந்தை அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

ii) மாநிலம் முழுவதும் வர்த்தகம் மேற்கொள்ள ஒற்றை உரிமமே போதுமானது.


iii) ஒற்றை இடத்தில் சந்தைக்கான கட்டணம் செலுத்தும் வசதி.

iv) விலை நிர்ணயம் செய்வதற்காக இணைய வழியில் ஏலம் விடுதலுக்கான விதிமுறைகள்

v) நாடு முழுவதுமாக வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கான போக்குவரத்துச் சங்கிலி முறையை ஏற்படுத்துதல்.

vi) அறிவியல் முறையிலான சேமிப்பு நிலையங்கள் மற்றும் வேளாண் பொருட்களின் இடப்பெயர்வுக்கு வழிவகுத்தல்.

**e-NAM செயல்பாடுகள் :**




Functions of e-NAM

i) விவசாயிகள் இணைய வழியாகவோ நேரடியாகவோ தங்களது விளைபொருட்களை விற்க இயலும்.

ii) பரிவர்த்தனைகள் அனைத்தும் APMC-ல் இடம்பெறும்.

**2. பின்வருவனவற்றை விளக்குக.**

**i) HYSIS செயற்கைக் கோளின் பயன்பாடுகள்**

a) புவி கூர்நோக்கு செயற்கைக்கோள்

b) விவசாயம், மண்ணியல், மண் வள அளவீடு

c) சுற்றுச்சூழல் கண்காணிப்பு

d) தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் மாசுபாட்டினைக் கண்டறிதல்.

e) கடற்கரையோரப் பகுதிகள் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளைப் பற்றிய அறிவு.

**ii) GSLV – MK III D2:**

a. GSLV MKIII வரிசையில் இரண்டாவது முயற்சியாக அனுப்பப்பட்ட விண்கலம் (Developmental Flight)

b. இஸ்ரோவினால் தயாரிக்கப்பட்ட மூன்று நிலைகளைக் கொண்ட கனரக உந்து வாகனம்.

c. கிரையோஜெனிக் இறுதி நிலை

d. தாங்கு திறன் : 4 டன் வரையிலான கலச்சுமையை புவிநிலை மாற்று சுற்றுப்பாதை (GTO) வரையிலும் 10 டன் வரையிலான கலச்சுமையை தாழ்வட்டப்பாதை (LEO) வரையிலும் எடுத்துச் செல்ல வல்லது.

e. 2018 நவம்பர் 14 அன்று GSAT-29 செயற்கைக் கோள்

**iii) NovaSAR:**

a) ஐக்கிய இராச்சியத்தின் செயற்கைக்கோள்; இந்தியாவின் PSLV C-42 இராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

b) S.கற்றை செயற்கைத் துளை கதிர்வீதிணி (Synthetic Aperture RADAR) செயற்கைக் கோள்.

c) சூரிய ஒத்திசைவு வட்டப்பாதைக்கு (Sun Synchronous Orbit) அனுப்பப்பட்டுள்ளது.

d) **பயன்பாடுகள்** :

- கானக வரைவு (Forest Mapping)
- நிலப் பயன்பாடு மற்றும் பனிபடர்வினைக் கண்காணித்தல்.
- வெள்ளம் மற்றும் இடர் மேலாண்மை

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

- கடல்சார் திட்டங்கள்

**3. தமிழ்நாடு லோக் ஆயுக்தா 2018 - பற்றி விவாதிக்க.**

i) நிர்வாக சீரமைப்புக் குழுவானது (ARC) லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா அமைப்புகள் உருவாக்கப்படுவதை வலியுறுத்துகிறது.

ii) லோக்பால் : மத்திய அரசு

iii) லோக் ஆயுக்தா : மாநில ஊழலுக்கு எதிரான குறை தீர் அமைப்பு.

iv) முதன் முதலாக லோக் ஆயுக்தாவை நடைமுறைப்படுத்திய மாநிலம் - மகாராஷ்டிரா; 2018 ஜூலை 9 அன்று தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**தமிழ்நாடு - லோக் ஆயுக்தா**

i) லோக் ஆயுக்தாவுக்கான சட்ட முன்வரைவானது தமிழ்நாடு பணியாளர் மற்றும் நிர்வாக சீரமைப்பு அமைச்சரால் தமிழக சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**ii) அதிகார வரம்பு**

a. அமைச்சர்கள்

b. சட்ட மன்ற உறுப்பினர்கள்

c. அலுவலர்கள்

d. அரசு ஊழியர்கள்

**அமைப்பு :**

i) தலைவர் + 4 உறுப்பினர்கள்

ii) தலைவர் : 25 ஆண்டு கால பணி அனுபவம் கொண்ட முன்னாள் அல்லது தற்போதைய உயர்நீதி மன்ற நீதிபதி

iii) பதவிக்காலம் : 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை

**iv) உறுப்பினர்கள்:**



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

a. நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்ட மன்ற உறுப்பினராகவோ இருக்கக் கூடாது.

b. 45 வயதுக்கு குறைவானவராகவோ இருத்தல் கூடாது.

**தேர்வுக் குழு** :

i) முதலமைச்சர்

ii) சட்டப் பேரவையின் தலைவர்

iii) எதிர்க் கட்சித் தலைவர்

**சிறப்பம்சங்கள்** :

i) முதலமைச்சரும் அமைச்சரவை உறப்பினர்களும் லோக் ஆயுக்தா அதிகார வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்; உள்ளாட்சி அமைப்புகளும் அரசு ஒப்பந்த ஊழியர்களும் அதிகார வரம்புக்குள் கொண்டு வரப் படவில்லை.

ii) பொய்யான புகார் அளிப்பவர்களுக்கு ஒரு லட்ச ரூபாய் வரை அபராதமும் ஓராண்டு வரை சிறைத் தண்டனையும் வழங்கப்படலாம்.

**4. பின்வருவனவற்றை விளக்குக.**

**i) தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NTCA) செயல்பாடுகள்** :

a. புலிகள் பாதுகாப்பு மேலாண்மையில் ஒழுங்குமுறையான நெறிகளை வகுத்தல்.

b. புலிகள் காப்பகத்துடன் தொடர்புடைய பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குதல்.

c. வருடாந்திர தணிக்கையை பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தல்.

d. முதலமைச்சரின் தலைமையில் மாநில அளவிலான ஒழுங்காற்றுக் குழுவினை அமைத்தல் மற்றும் புலிகள் பாதுகாப்பு அறக்கட்டளையை உருவாக்குதல்.

e. புதிய புலிகள் பாதுகாப்புப் பகுதிகளை ஏற்படுத்துதல்.

ii) **தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (National Green Tribunal):**

a. தேசிய பசுமைத் தீர்ப்பாயச் சட்டம், 2010-ன் மூலம் அமைக்கப்பட்டது.

b. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனப்பகுதிகள் மற்றும் இயற்கை வளங்களைப் பேணுதல் தொடர்பான சட்டங்களில் எழும் சிக்கல்களை விரைவாகவும் திறம்படவும் முடித்து வைத்தல்.

iii) **மத்திய நீர்வள ஆணையம் (CWC) :**

a. நீர்வளங்கள் தொடர்பான இந்தியாவின் முதன்மையான தொழில்நுட்ப நிறுவனம்.

b. மத்திய நீர்வள ஆதாரங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகத்தின் இணைக்கப்பட்ட அலுவலகம் (attached office) ஆகும்.

## *15 மதிப்பெண் வினாக்கள்*

**1. ‘அணை பாதுகாப்பு மசோதா, 2018’-ன் முக்கிய அம்சங்களை விவாதிக்க.**

**மின்-தேசிய வேளாண் சந்தை (e-NAM) :**

நோக்கம் : அணைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான நடைமுறைகளை ஏற்படுத்துதல்.

மசோதாவுக்கான தேவை :

i) இந்தியாவில்,

a. 75% அணைகள் - 25 ஆண்டுகள் பழமையானவை.

b. 164 அணைகள் - 100 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானவை.


ii) இந்தியாவில் இதுவரை 36 அணை உடைப்புகள் ஏற்பட்டுள்ளன.

iii) அணைபாதுகாப்பினை உறுதி செய்யும் நிமித்தமாக இந்த மசோதா உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மசோதாவானது நாடு

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

முழுவதிலும் பின்பற்றப்படும் வகையில் அணை பாதுகாப்பு நடைமுறைகளை மேம்படுத்தவும் தரநிலைப்படுத்தவும் மத்திய மற்றும் மாநில அளவில் நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகளை (Institutional Set ups) உருவாக்க முனைகிறது.

**அணை பாதுகாப்பு :**




**நிறுவனக் கட்டுமானம்**

**அணைப் பாதுகாப்புக்கான தேசியக் குழு (NCDS)**

i) அணைப் பாதுகாப்பு தொடர்பான கொள்கை முடிவுகளை வகுத்தல்.

ii) தேவையான ஒழுங்குமுறை விதிகளைப் பரிந்துரைத்தல்.

**தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம் (NDSA) :**

i) ஒழுங்குமுறை ஆணையம்

ii) அணைப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிர்ணயங்களை நடைமுறைப்படுத்துதல்.

iii) பின்வருவனவற்றுக்கு இடையிலான சச்சரவுகளை தீர்த்து வைத்தல்

a. SDSO Vs SDSO

b. SDSO Vs அணை உரிமையாளர் (பொதுத் துறை நிறுவனங்கள்)

**மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பு (SDSO) :**

i) மாநில அரசுகளால் ஏற்படுத்தப்படும் அமைப்பு

ii) அணைகளின் நிரந்தர மேற்பார்வை

iii) அனைத்து அணைகளின் தரவுத் தளத்தினைப் பராமரித்தல்

**அணை பாதுகாப்புக்கான மாநிலக் குழு (SCDS) :**

i) மாநில அணைப் பாதுகாப்பு அமைப்பின் (SDSO) பணிகளை மதிப்பாய்வு செய்தல்.

ii) ஆறுகளின் தொடக்கத்திலும் இறுதியிலும் உள்ள மாநிலங்களின் மீதான உள்ளார்ந்த விளைவுகளை மதீப்பீடு செய்தல்.

**அணை உரிமையாளர்களின் பொறுப்புகள் :**

i) அணை உரிமையாளர்கள் அணைப் பாதுகாப்புப் பிரிவுகளை (Dam Safety Units) உருவாக்க வேண்டும்.

ii) இப்பிரிவானது அணைகளை ஆய்வு செய்ய வேண்டிய கால கட்டங்கள் :

a. பருவமழைக்கு முன்னும் பின்னும்,

b. நில நடுக்கம், வெள்ளம் போன்றவற்றுக்கு பிறகு.

இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ள விதிகளைப் பின்பற்றாதவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை விவரங்கள் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## 30 மதிப்பெண் வினாக்கள்

**1. இந்திய நியூட்ரினோ ஆய்வகம் (Indian Neutrino Observatory) பற்றி ஒரு கட்டுரை வரைக.**

**நியூட்ரினோ** :

i) இரண்டாவதாக, பேரண்டத்தில் இரண்டாவது அதிகமாகக் காணப்படும் துகள்கள்

ii) எந்த ஒரு பொருளுடனும் வினைபுரியாததாலும் அவற்றினை எளிதில் ஊடுருவிச் சென்று விடுவதாலும் இவற்றினை எளிதில் கண்டறிய இயலாது.

iii) மின்சுமையற்றவை; ஏறக்குறைய நிறையற்றவை.

iv) எந்த ஒரு பொருளுடனும் செயலாற்றும் தன்மையற்றதால் நெடுந்தொலைவு செல்லக் கூடியவை.

v) நிறையின் அடிப்படையில் மூன்று வகையான நியூட்ரினோக்கள் உள்ளன. அவையாவன.

a. எலக்ட்ரான் நியூட்ரினோ

b. மீயான் நியூட்ரினோ

c. டவ் நியூட்ரினோ

vi) சூரியனின் மையத்தில் உற்பத்தி செய்யப்படும் நியூட்ரினோக்கள் சூரியக் குடும்பம் முழுவதும் விரவிக் காணப்படுகின்றன.

vii) நியூட்ரினோக்கள் சூரியன் மற்றும் நட்சத்திரங்களில் ஆற்றல் உருவாக்கம் பற்றியும் அண்டத்தின் தோற்றம் பற்றியும் அறிந்து கொள்ள உதவுகின்றன.

**இந்திய நியூட்ரினோ ஆய்வகம்** :

i) நிலப்பரப்புக்குக் கீழே மேற்கொள்ளப்படும் இத்திட்டமானது இந்தியாவின் அணு ஆற்றல் துறை (DAE) மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினால் (DST) கூட்டாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

ii) இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள மிகப்பெரிய சோதனை அடிப்படையிலான துகள் இயற்பியல் திட்டம்

**ஆய்வகத்தின் சிறப்பம்சங்கள் :**

i) முதன்மை குகை : இதில் 130 மீட்டர் நீளமும், 26 மீட்டர் அகலமும் 30 மீட்டர் உயரமும் கொண்ட உணர்விகள் (detectors) உள்ளன.

ii) இரண்டு சிறிய குகைகள் : நியூட்ரினோ இரட்டை உணர்வி மற்றும் கரும்பொருளுக்கானவை. (dark matter)

iii) மேற்கொள்ளப்படும் சோதனைகள் : நியூட்ரினோ அற்ற இரட்டை பீட்டா சிதைவு மற்றும் கரும் பொருளுக்கான தேடல்

iv) தேனி மாவட்டத்தின் மேற்கு போடி மலைப்பகுதிகளில் உள்ள பொட்டிபுரத்தில் உள்ள நிலத்தடி ஆய்வகமானது 2 கிலோ மீட்டர் நீளமுள்ள சுரங்கத்தைக் கொண்டது.

v) மதுரையிலுள்ள தேசிய உயர் ஆற்றல் இயற்பியல் மையம் (NCHEP) - செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கான மையம்.

vi) இரும்பு கலோரி மீட்டர் உணர்வி (ICAL) - உலகிலேயே மிகப்பெரிய காந்தத்தைக் கொண்டுள்ளது.

**பொட்டிபுரம் தேர்வு செய்யப்பட்டதன் காரணம் :**

i) நியூட்ரினோ உணர்வியை அமைப்பதற்குத் தேவையான புவியியல் தேவைகளாவன :

a. 360° கோண வளைவு

b. ஒரு கிலோமீட்டர் தொலைவுக்கு தொடர்ச்சியான பாறை.

c. குறைந்தபட்சம் ஒரு கிலோமீட்டர் தொலைவுள்ள மலை அமைப்பு

ii) போடி மலைப்பகுதியிலுள்ள பொட்டிபுரமானது மேற்கண்ட தகுதிகளைப் பெற்றிருப்பதால் இந்தத் திட்டத்துக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**முக்கியத்துவம்** :

i) நியூட்ரினோக்கள் (blueprint of nature) சிறு துகள்களிலிருந்து சிக்கலான பெரிய மூலக்கூறுகள் வரை எவ்வாறு உருவாகின்றன என்பதைக் கண்டறிய உதவும்.

ii) மாணவர்களிடையே அறிவியல் மற்றும் ஆராய்ச்சிப் படிப்பை தேர்ந்தெடுக்கும் ஆர்வத்தினை வளர்த்தெடுக்கும்.

**பயன்பாடுகள்** :

a. வானியல் இயற்பியல் (astrophysics) வானியல் மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையான புரிதல் கோட்பாட்டில் மிகப்பெரிய புரட்சி ஏற்படும்.

b. அடிப்படை இயற்பியல் விதிகளின் புரிதலில் மேம்பாடு ஏற்படும்.

c. அணு உலைகளை தொலைவிலிருந்து கண்காணிப்பதன் மூலம் அணு ஆயுதப் பரவலைத் தடை செய்ய இயலும்.

d. புவியில் உள்ள இயற்கை வளங்களைக் கண்டறிய இயலும்.

e. கரும் பொருள் பற்றிய புரிதலை ஏற்படுத்தும்.

f. நியூட்ரினோ வரைவியல் (Neutrino Tomography) :

புவி ஓட்டில் உள்ள யுரேனியம், பொட்டாசியம் மற்றும் தோரியம் ஆகியவற்றின் கதிரியக்க சிதைவினால் உருவாகும் புவி-நியூட்ரினோக்களை (geo-neutrinos) கண்காணிப்பு அமைப்புகளால் வேகமான பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல் நியூட்ரினோ வரைவியல் ஆகும். இது நில அதிர்வு தொடர்பான தகவல்களைத் (Seismographic information) தருவதால் புவிக்குள் ஏற்படும் மாற்றங்களை முன்கூட்டியே அறிய முடியும்.

g. நியூட்ரினோ சார்ந்த தகவல் தொடர்பில் ஏற்படும் தகவல் பரிமாற்ற இழப்பு சுழியாகும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

h. வேற்று கிரகத்தில் ஏதேனும் உயிரினங்கள் இருப்பின் அவற்றுடன் தொடர்பு கொள்வதற்கு நியூட்ரினோ தகவல் தொடர்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**பிற நியூட்ரினோ ஆய்வுத் திட்டங்கள் :**

a. LAGUNA (Large Apparatus Studying Grand Unification & Neutrino Astrophysics) ஐரோப்பா.

b. Hyper Kamiokande Detector, காமியோகா ஆய்வகம், ஜப்பான்.

c. DUNE (Deep Underground Neutrino) திட்டம், அமெரிக்கா.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

**2. திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 - விரிவாக விளக்குக.**

**முன்னுரை :**

i) முறையான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறையுடன் கூடிய கழிவுகள் சேகரிப்பு, போக்குவரத்து, சுத்திகரிப்பு மற்றும் அவற்றினை அகற்றுதல்.

ii) 3R - Reduce, Reuse and Recycle (குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி)

iii) மாசுபடுத்துவோரே கட்டணம் செலுத்தும் கொள்கை - சுற்றுச் சூழலுக்கு ஊறு விளைவித்ததற்கு நிகரான பண மதிப்பை மாசுபடுத்திய நபரே வழங்க வேண்டும்.

**திடக்கழிவின் வகைகள் :**

i) கட்டட உருவாக்கம் மற்றும் அழிக்கும் போது வெளிப்படும் கழிவுகள் (எ.கா.) கட்டுமானக் கழிவுகள்

ii) நெகிழிக் கழிவுகள் - (எ.கா.) பாலித்தீன் பைகள், நெகிழிக் குடுவைகள்

iii) உயிரி மருத்துவக் கழிவுகள் - (எ.கா.) ஊசிகள், மருந்தேற்றிகள்

iv) அபாயகரமான கழிவுகள் - சுற்றுச்சூழலுக்கும் தனிநபர்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவை.

v) மின்-கழிவுகள் - (எ.கா.) அச்சிடப்பட்ட மின் சுற்றுப் பலகை, கைபேசிகள்

**திடக்கழிவு மேலாண்மைக்கான தேவை :**

i) ஆண்டுதோறும் 62 மில்லியன் டன் அளவுக்கு கழிவுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

a. 5.6 மில்லியன் டன்கள் - நெகிழிக் கழிவுகள்

b. 0.17 மில்லியன் டன்கள் - உயிரி மருத்துவக் கழிவுகள்

c. 7.9 மில்லியன் டன்கள் - அபாயகரமான கழிவுகள்

d. 15 லட்சம் டன்கள் - மின் கழிவுகள்

ii) ஒரு நபர் ஒரு நாளில் உருவாக்கும் குப்பைகளின் அளவு - 200 முதல் 600 கிராம் வரை.

iii) 2030-ம் ஆண்டில், 165 மில்லியன் டன் கழிவுகள் உருவாக்கப்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

iv) எனவே, கழிவுகள் மேலாண்மைக்கான முறையான சட்டமானது அவசியமாகிறது.

**புதிய திடக் கழிவு மேலாண்மை விதிகள், 2016-ன் முக்கியமான சிறப்பம்சங்கள்:**

**1) உற்பத்தியாகும் இடத்திலேயே கழிவுகளைப் பிரித்தல்**

i. கழிவுகளை மூன்று வகைகளாகப் பிரித்தல்

a. மக்கும் கழிவுகள் (உணவுக் கழிவுகள்)

b. உலர் கழிவுகள் (நெகிழி, உலோகம், தாள், மரக்கட்டை)

c. அபாயகரமான வீட்டுக் கழிவுகள் (டையாப்பர்கள், தூய்மையாக்கிகள்)

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

ii. உணவகங்களில் உருவாக்கப்படும் மக்கும் கழிவுகளை எருவாக்கல் அல்லது உயிரி மீத்தேனாக்கம் செய்வதற்கான அமைப்பினை ஏற்படுத்துதல்.

**2) சிப்பமிடும் போது வெளிப்படும் கழிவுகளை திரும்பப் பெறுவதற்கான திட்டம் :**

i) சிப்பமிடும் போது வெளியாகும் மக்காத கழிவுகளை திரும்பப் பெறுதல் உற்பத்தியாளர்களின் கடமையாகும்.

**3) கழிவுகளைப் பதனிடுதல் மற்றும் சுத்திகரித்தல்:**

i) மக்கும் கழிவுகள் முறையாகப் பதனிடப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு எருவாக்கல் அல்லது உயிரி மீத்தேனாக்கம் மூலம் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

ii) தொழிற்சாலைப் பகுதிகள் (சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்), அதனுடைய மொத்த பரப்பளவில் 5% இடத்தினை குப்பைகளை மறுசுழற்சி செய்வதற்காக ஒதுக்க வேண்டும்.

iii) உள்ளாட்சி அமைப்புகள் (1 மில்லியன் மக்கள் தொகை) கழிவுகள் சுத்திகரிப்பு வசதியினை ஏற்படுத்த வேண்டும்.

iv) பழைய மற்றும் உபயோகத்தில் இல்லாத குப்பைக் கிடங்குகள் உயிர்வழிச் சீராக்க முறையினைப் பின்பற்றுதல்.

**4) எருவாக்கல் முறையை ஊக்குவித்தல்:**

i) மத்திய அரசின் உரத்துறையனது (Department of Fertilizers) வேதி உரங்களுடனான எருவாக்கம் செய்யும் முறையை ஊக்குவிக்கிறது.

**5) கழிவிலிருந்து ஆற்றல் எடுக்கும் முறையை ஊக்குவித்தல்:**

i) தொழிற்சாலைகள் தனது மொத்த ஆற்றல் தேவையில் 5 விழுக்காட்டினை Refuse - Derived Fuel Plant மூலம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ii) மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகமானது கழிவுகளிலிருந்து ஆற்றல் தயாரிப்பதற்கான உள்கட்டமைப்பு

வசதிகளை ஏற்படுத்தித் தருவதுடன் உரிய மானியத்தையும் வழங்க வேண்டும்.

iii) ஆற்றல் அமைச்சகமானது கழிவுகளிலிருந்து ஆற்றல் தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து மின் பகிர்மான நிறுவனங்கள் (Discoms) மின்சாரத்தை கட்டாயம் வாங்க வழிவகை செய்வதுடன் அதற்கான கட்டணத்தையும் நிர்ணயிக்க வேண்டும்.

**6) மலைப்பகுதிகளில் கழிவு மேலாண்மை :**

i) மலைப் பகுதிகளில் உருவாகும் கழிவுகள் அந்த இடத்திலிருந்து 25 கிலோமீட்டர் தூரத்துக்குள் ஏதேனும் ஒரு சமவெளிப் பகுதியில் கொட்டப்பட வேண்டும்.

**7) மத்திய கண்காணிப்புக் குழுவினை அமைத்தல்**

i) தலைவர் - செயலர், MOEF & CC

ii) மத்திய மற்றும் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் ஆண்டுதோறும் சந்தித்து மேலாண்மை விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்கின்றனர்.

**8) திடக்கழிவு மேலாண்மை விதிகளின் குறைபாடுகள் :**

i) விதிகளை நடைமுறைப்படுத்துவதில் நிகழும் தவறுகளுக்கு சரியான தண்டனை இல்லை.

ii) கழிவு மேலாண்மையில் பரவலாக்கப்பட்ட நடைமுறைப்படுத்துதலில் குறைபாடுகள் உள்ளன.

iii) அமைப்பு சாரா துறையின் பங்களிப்பு குறைவு.

iv) வீடுகளில் உருவாக்கப்படும் கழிவுகளைக் கட்டுப்படுத்துவதில் தேவையான பழக்க வழக்க மாற்றங்களுக்கான விதிகள் குறைவு.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS